## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் (“வங்கி”) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து வங்கியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 03 ஆண்டுகளுக்கும் அதிகமாக சரி செய்யப்படாமல் உரிமை கோரிக்கை வவுச்சர் கணக்கில் ஒரு அசாதாரண செலவு மீதியாக ரூபா. 13,651,821 கீழ் கொண்டு செல்லப்பட்டது. இந்த அசாதாரண செலவு மீதிக்கான காரணங்கள் அடையாளம் காணப்படவில்லை. மேலும், 02 ஆண்டுகளுக்கும் அதிகமாக இணக்கம் செய்யப்படாமல் உரிமை கோரிக்கை வவுச்சர் கணக்கில் | சிலாபம் கிளை மற்றும் குருநாகல் கிளையில் இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் இப்பொழுது நீக்கப்பட்டன. கண்டி கிளையின் மீதிகள் இணக்கம் செய்யப்படுகின்றன. | கண்டி கிளையின் மீதிகளை இணக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சிலாபம் கிளை மற்றும் குருநாகல் கிளையில் வரவு மீதிகளாக முறையே ரூபா. 1,996,000 மற்றும் ரூபா. 1,030,374 காணப்பட்டிருந்தன. | | |
| (ii) | எஸ்ரேட் வருங்கால வைப்பு நிதி கடன் நிலுவை தொகையில் பெற வேண்டிய வட்டி தொடர்பாக 2018 திசெம்பர் 31 இல் பொதுப்பேரேட்டின் படியான மீதிக்கும் மற்றும் கடன் அட்டவணையின் படியான மீதிக்கும் இடையே ரூபா. 8,088,496 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொதுப் பேரேட்டிற்கும் மற்றும் கடன் அட்டவணைக்கும் இடையிலான வேறுபாடுகளை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (iii) | குணிசமான காலம் சரி செய்யப்படாமல் தேறிய காசோலைகள் கணக்கில் ஒரு அசாதாரண வரவு மீதி ரூபா. 8,137,376 கீழ் கொண்டு செல்லப்பட்டது. மேற்கூறிய வரவு மீதியில் ரூபா. 7,885,705 05 ஆண்டுகளுக்கும் அதிகமாக கணக்கில் காணப்பட்டிருந்தது. இந்த வரவு மீதிக்கான காரணங்கள் அடையாளம் காணப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கூறிய வேறுபாடுகளை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (iv) | கண்டி கிளையில் தேறிய காசோலைகள் கணக்கில், அசாதாரண வரவு மீதி ரூபா. 2,702,521 ஆல் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது. இதற்கு 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அசாதாரண வரவு மீதியை சரி செய்ய, அதே கணக்கில் தவறான பதிவுகள் பதியப்பட்டமை காரணமாகும். | 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கூறிய வேறுபாடுகளை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (v) | காசுப்பாய்ச்சல் கூற்றில் உண்மையான காசு வெளிப்பாய்ச்சல் தொகையை விட வற், என்பிரி, டிஆர்எல் மற்றும் வருமான வரி மீதான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா. 24,652,323 ஆல் அதிகமாக பதிவு செய்யப்பட்டிருந்தது.. மேலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிறுத்தி வைக்கப்பட்ட வரி ரூபா. 3,090,360 கழிக்கப்படாமல், பங்கு இலாப வருமானத்தின் மீதான காசு உட்பாய்ச்சல் பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2018 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கொடுப்பனவானது குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இல்லை. 2019 திசெம்பரில் முடிவடைந்த ஆண்டிற்கான அட்டுறு வரி சரி செய்யப்படாமை மேற்கூறிய வேறுபாட்டிற்கான காரணங்களாக இருக்கின்றது. | 2019 திசெம்பரில் முடிவடைந்த ஆண்டிற்கான அட்டுறு வரியை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | 2018 திசெம்பர் 31 இல் வங்கியின் கிளைக்கணக்குகளிற்கு இடையே ரூபா. 4,296,607 வேறுபாடு அவதானிக்கப்பட்டிருந்தது. | இந்த வேறுபாடுகள் இப்பொழுது நீக்கப்பட்டுள்ளது. | |
| (vii) | ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் செலுத்த வேண்டியவைகள் கணக்கில் 12 வருடங்களுக்கும் அதிகமாக ஒரு இணக்கம் செய்யப்படாத மீதி ரூபா. 3,008,166 கீழ் கொண்டு செல்லப்பட்டிருந்தது | 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கூறிய தொகையை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (viii) | தவறாக பதிந்த பதிவுகள் காரணமாக எஸ்ரேட் துறை கணக்குகளுக்கான கடன் தவணைக்கட்டணத்தில் ஒரு அசாதாரண வரவு மீதி கண்டி கிளை மற்றும் ஹற்றன் கிளையில் முறையே ரூபா. 2,499,034 மற்றும் ரூபா. 303,814 பதிவு செய்யப்பட்டிருந்தது. | **ஹற்றன் கிளை** - ரூபா. 303,814 தவறான வரவு தொகையானது இப்பொழுது சரி செய்யப்பட்டுள்ளது.<br>**கண்டி கிளை** - 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கண்டி கிளையின் அசாதாரண வரவு மீதியை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ix) | கவனத்தில் கொள்ளத்தக்க காலத்திற்கு சரி செய்யப்படாமல் கிளை ஆலோசனை கணக்கில் ஒரு அசாதாரண வரவு மீதி ரூபா. 2,508,640 இருந்தது. மேற்கூறிய வரவு மீதியில் ரூபா. 2,489,500 03 ஆண்டுகளுக்கும் அதிகமாக கணக்கில் காணப்பட்டிருந்தது. இந்த வரவு மீதிக்கான காரணங்கள் அடையாளம் காணப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிளை ஆலோசனை கணக்கில் உள்ள அசாதாரண வரவு மீதி ரூபா. 2,508,640 ஐ நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (x) | மோசடிகள் கணக்கில் ரூபா. 2,400,000 தொகை பதிவு செய்யப்பட்டிருந்தது. மற்றும் நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. குறித்த மீதி 1999 இல் நடைபெற்ற இரண்டு மோசடிகள் தொடர்பான தொகைகளை பிரதிபலிக்கின்றது. இருப்பினும், இந்த மீதியை மீட்டெடுக்கக்கூடிய தன்மை சந்தேகத்திற்குரியது. | மேற்கூறிய மோசடிகளின் மீட்டெடுக்கக்கூடிய தன்மை மிகவும் கடினமானது. 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வங்கியின் சட்ட பிரிவிடமிருந்து, மீட்டெடுக்க முடியாத தன்மை உறுதிப்பாட்டின் பின்னர் மேற்கூறிய தொகையை பதிவளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (xi) | தலைமை காரியாலயத்தின் வாடகை முற்பண கணக்கில் ஒரு செலவு மீதி ரூபா. 1,615,152 கீழ் கொண்டு செல்லப்பட்டிருந்தது. இந்த செலவு | 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை | மேற்கூறிய தொகையை நீக்குவதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | மீதிக்கான காரணங்கள் அடையாளம் காணப்படவில்லை. | நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (xii) | 2 வருடங்களுக்கும் அதிகமாக வருங்கால வைப்பு நிதி கணக்கிற்கு அட்டுறு உதவியாளராக ஒரு மீட்கமுடியாத வரவு மீதியாக ரூபா. 1,512,882 பதிவு செய்யப்பட்டிருந்தது. மற்றும் நிதிக்கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோரின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கூறிய தொகையை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (xiii) | 2018 திசெம்பர் 26 இலிருந்து 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்காக சரியான தொகையை விட செலுத்த வேண்டிய வட்டி தொகை உயர்வாக தேசிய சேமிப்பு வங்கி கடனில் ரூபா. 818,630 ஆல் வங்கி தவறாக அங்கீகரித்திருந்தது. | இப்பொழுது சரி செய்யப்பட்டுள்ளது. | |
| (xiv) | வங்கி அதன் நிலையான சொத்துக்கள் அனைத்தையும் வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் அவற்றின் இயல்புத்தன்மைக்கு ஏற்ப ஒழுங்காக தொகுக்காமல் வெளிப்படுத்தியிருந்தது. | எதிர்கால அறிக்கையிடலுக்காக இணங்க குறித்துக் கொள்ளப்பட்டது. | எல்கேஎஸ் 16 இன் படி, சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் தொகுக்கப்பட்டு வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இணக்கப்பாடு செய்யாத கட்டுப்பாட்டு கணக்கில் ஒரு வரவு மீதியாக ரூபா. 12,772,657 கீழ் கொண்டு செல்லப்பட்டிருந்தது.மற்றும் நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தியிருந்தது. 2016 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் துணை ஆவணங்கள் கிடைக்காமையினால், இணக்கப்பாடு செய்யாத வேறுபாடுகள் குறித்த பொதுப் பேரேட்டு கணக்கிலிருந்து இணக்கப்பாடு செய்யாத கட்டுப்பாட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டதன் காரணமாக குறித்த மீதி எழுந்தது. | 2019 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்பாக மேற்கூறிய வேறுபாட்டினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கூறிய வேறுபாடுகளை நீக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் மொத்த செயற்படாத தனிநபர் கடன்களின் நிலுவையான ரூபா. 889,881,994 இல் முக்கிய செயற்படா வாடிக்கையாளர்களின் 12 கடன்கள் மொத்தம் ரூபா. 19,598,126 ஐ பிரதிபலிக்கின்றது. கடனளிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கியால் ஒரு தவணைக்கட்டணம் கூட மீட்டெடுக்க முடியவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் ஈபிஎவ் கடனின் என்பிஎல் 65 சதவீதமாக இருந்ததுடன், ஈபிஎவ் கடன்களானது முழுமையாக காசாக திருப்பி பெறக்கூடிய வருங்கால வைப்புச்சொத்துக்களாக நடாத்தப்படுகின்றன எனவே ஒவ்வொரு ஆண்டும் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து ஈபிஎவ் கடன்களுக்களின் அனைத்து நிலுவைத்தொகையும் உரிமை கோரப்படுகின்றன. எனவே ஈபிஎவ் கடன்களுக்களின் உயர் என்பிஎல் எந்தவொரு தாக்கத்தினையும் ஏற்படுத்தாது. | செயற்படாத கடன்களினை மீட்டெடுக்க மற்றும் வாடிக்கையாளர்களுடன் பின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) வங்கியின் மொத்த கடன் பட்டியலில் தனிநபர் கடன்கள், ஈட்டுக்கடன்கள் மற்றும் ஈபிஎவ் கடன்கள் முறையே 42 சதவீதம், 24 சதவீதம் மற்றும் 18 சதவீதம் பங்களித்திருக்கின்றன. 2018 திசெம்பர் 31 இல் மேற்கூறிய மூன்று பிரதான வகைகளில் செயற்படா கடன் விகிதமானது முறையே 6 சதவீதம், 9 சதவீதம் மற்றும் 65 சதவீதமாக பதிவு செய்யப்பட்டிருந்தது. ஏனைய கடன் வகைகளின் என்பிஎல் விகிதங்களுடன் ஒப்பிடும் போது ஈபிஎவ் கடன் உயர்ந்த என்பிஎல் விகிதத்தை கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. | | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல. பிஈடீ 03/2016 – திகதி 2016 ஏப்ரல் 29 | வங்கி சம்பளத்திலிருந்து கழிக்கப்படுவதற்கு பதிலாக அதன் ஊழியர்களின் சார்பாக அதனுடைய சொந்த நிதியிலிருந்து 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா. 20,159,760 தொகையை பிஎவைஈ (PAYE) வரியாக செலுத்தியிருந்தது. | கூட்டு ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் படி, வங்கியால் ஊழியர்களின் பிஎவைஈ (PAYE) வரி ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. | வங்கியின் பிஎவைஈ (PAYE) வரி தொடர்பாக "2016 ஏப்ரல் 29 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல. பிஈடீ 03/2016" , இனை பின்பற்ற வேண்டும். |
| தேசிய பெறுகை வழிகாட்டி - 2006 | | | |
| பிரிவு 5.1.1 | தொழில்நுட்ப அமைப்புக் குறிப்பீடுகள், வரைதல்கள் முதலியன உள்ளடங்கிய விலைக்கேள்வி ஆவணங்களினை வங்கியால் ஒழுங்கான முறையில் தயாரிக்க முடியவில்லை. | தற்போது இது சரி செய்யப்பட்டுள்ளது. | |
| பிரிவு 6.3.3 | விலைக்கேள்வி திறத்தற்குழு நியமிக்கப்படவில்லை மற்றும் விலைக்கேள்வி திறத்தல் நடைமுறை முறையாக பின்பற்றப்படவில்லை. | 2019 ஜுன் 26 முதல் விலைக்கேள்வி திறத்தற்குழு செயற்பட்டு வருகின்றது. | வங்கியின் பெறுகை நடவடிக்கைகளின் போது தேசிய பெறுகை வழிகாட்டி - 2006 பின்பற்றப்பட வேண்டும். |
| பிரிவு 7.1 | தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரிவு 7.1 இன் படி, தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு பெற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கேள்விகளை மதிப்பிடவில்லை. | பகிர்வு வேலையின் பெறுமதி பொருண்மையாக இல்லாததால் இது வாங்குதல் முறையின் கீழ் செய்யப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகளின் போது தேசிய பெறுகை வழிகாட்டி - 2006 பின்பற்றப்பட வேண்டும். |
| பிரிவு 8.9.1 | ஒரு முறையான ஒப்பந்த நிறைவேற்றத்தை தொடர்ந்து வங்கிக்கும் விலைக் கேள்வியாளர்களுக்கும் இடையே | தெரிவு செய்யப்பட்ட விலைக் கேள்வியாளர்களுக்கு வழங்க வேண்டிய முறைசார் கடிதமாக, வங்கி முன்பே | வங்கிக்கும் விலைக் கேள்வியாளர்களுக் கும் இடையே ஒரு முறையான ஒப்பந்த |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறைசார் கடிதம் பதிவு செய்யப்படவில்லை. | அச்சிடப்பட்ட வரிசை எண்களை கொண்ட கொள்வனவு கட்டளையை பயன்படுத்துகின்றது. இருப்பினும், இப்பொழுது வழங்கப்பட்ட கடிதத்தில் விலைக் கேள்வியாளரின் ஒப்புதல் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. | நிறைவேற்றத்தின் போது, தேசிய பெறுகை வழிகாட்டி - 2006 இன் படி, ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைசார் கடிதம் தயாரிக்கப்பட வேண்டும். |
| பிரிவு 8.12.1 | இடைக்கால மற்றும் இறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, வேலையின் நிறைவேற்றமானது போதுமான அளவு கண்காணிக்கப் பட்டுள்ளதா அல்லது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா எனபதை உறுதிப்படுத்து வதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. | ஒப்பந்தத்தின் பெறுமதியை கருத்தில் கொண்டால், கண்காணிப்பு வேலைக்காக வெளிவாரி நிபுணரை பயன்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமில்லை. எனவே, வங்கியின் அதிகாரிகள் மற்றும் மனித வளப்பிரிவின் அதிகாரிகள் வினைத்திறன் செலவு அளவீட்டு மதிப்பீட்டினால் பகிர்வு வேலை உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டது. இதற்கு அதிகாரிகளினால் செய்யப்பட்ட வேலையின் சான்றிதழ் சான்றாக இருக்கின்றது. | இடைக்கால மற்றும் இறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக, வேலையின் நிறைவேற்றமானது போதுமான அளவு கண்காணிக்கப்பட்டு அல்லது மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கின்றது என்பதற்கான சான்றுகளின் கிடைப்பனவினை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 244,472,029 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 178,524,309 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 65,947,720 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வட்டி செலவு மற்றும் ஆளணிச் செலவின் அதிகரிப்பினை விட வட்டி வருமானத்தின் அதிகரிப்பு அதிக அளவாக இருக்கின்றமை முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு**

நேரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வங்கியின் வட்டி வருமானம் ரூபா. 780 மில்லியனால் அல்லது 16 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கியமாக இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா. 1.5 மில்லியனால் அல்லது 4 சதவீதத்தால் அதிகரித்தமை காரணம் ஆகும். நேரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டிச் செலவுகள் கூட ரூபா. 476 மில்லியனால் அல்லது 15 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு முக்கியமாக வாடிக்கையாளர்கள் வைப்பானது ரூபா. 652 மில்லியனால் அல்லது 1.9 சதவீதத்தால் அதிகரித்தமை காரணம் ஆகும். புதிய கூட்டு ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் படி ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு காரணமாக ஆளணிச் செலவுகள் ரூபா. 99 மில்லியனால் அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கியினுடைய துறை ரீதியான விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் வங்கியினுடைய முக்கியமான சில கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| **விகிதத்தின் பெயர்** | **வங்கி துறை விகிதம் 2018 (%)** | **2018 (%)** | **2017 (%)** |
|---|---|---|---|
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 7.7 | 4.82 | 3.62 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் | 0.8 | 1.13 | 0.98 |
| தேறிய வட்டி எல்லை | 3.2 | 4.72 | 4.66 |

(அ) 2018 திசெம்பர் 31 இல் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) மற்றும் சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) முறையே 1.2 சதவீதம் மற்றும் 0.15 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு 2018 இல் அதிகரித்த இலாபம் பிரதாக காரணமாகும்.

(ஆ) 2018 ஆம் ஆண்டிற்கான தேறிய வட்டி எல்லை 4.72 சதவீதமாக அவதானிக்கப்பட்டது. இது உரிமம் பெற்ற சிறப்பு வாய்ந்த வங்கி விகிதமான 3.2 சதவீதத்தை விட சற்று அதிகமாகும்.

(இ) ஈபிஎவ் கடன்கள் உட்பட வங்கியின் மொத்த செயற்படாத விகிதம், துறைசார் விகிதமான 4.8 சதவீதத்தை விட மிக உயர்வாக காணப்படுகின்றது. இதற்கு ஈபிஎவ் கடன் பிரிவின், 65 சதவீதமான உயர் செயற்படாத கடன் விகிதம் காரணமாக இருக்கிறது. 2018 இல் ஈபிஎவ் கடன்கள் இல்லாமல் மொத்த செயற்படாத கடன் விகிதம் 7 சதவீதமாக இருக்கிறது. இது கைத்தொழில் சராசரி விகிதமான 2.2 சதவீதத்தினை விட உயர்வாக காணப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மார்ச் இல் வங்கியினால் கிரிபத்கொடை கிளையினுடைய பகிர்வு மற்றும் கட்டுமான வேலைகளுக்காக ரூபா. 1,16 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், பகிர்வு வேலை முடிவடைந்து ஒன்பது மாதங்களின் பின்னர் 2018 ஜனவரியில் கிளை புதிய வளாகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, பகிர்வுக்காக ஏற்பட்ட செலவு பயனற்ற செலவாக காணப்படுகின்றது. | மேற்கூறிய செலவு வங்கியின் தகவல் தொழில்நுட்ப பிரிவினுடைய டிஆர் மையத்திற்கான ஏற்பட்டுள்ளது. கட்டிட வேலை முடிவடைந்த பின்னர், சொத்தின் உரிமையாளர், தான் சொத்தை விற்றதாகவும் மற்றும் 3 மாதத்தற்குள் கட்டிடத்தினை காலியாக்குவதற்கான அறிவித்தலை வழங்கவும் வங்கிக்கு அறிவிப்பார். | பொருத்தமான தரப்பினர்களுடன் ஒழுங்காக தொடர்பு கொண்டு ஒப்பந்தத்தின் தேவையான உட்பிரிவுகளை உள்ளடக்க வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கியின் கடன் பிரிவு 2016 செப்ரெம்பர் 01 இலிருந்து 2017 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் இரண்டு போலியான தனியார் நிறுவனங்களின் ஊழியர்களாக தங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 47 விண்ணப்பதாரர்களுக்கு ரூபா. 68.34 மில்லியன் தொகையான கடன்களை வழங்கியிருநத்து. மேலும் மேற்கூறிய விண்ணப்பதாரர்கள் குறித்த கடன்களுக்கான விண்ணப்பத்தில் போலி ஆவணங்களை சமர்ப்பித்திருந்தார்கள் என்பது வெளிப்பட்டது. 2018 திசெம்பர் 31 இல் செயற்படாத கடன் நிலுவையில் மேற்குறித்த கடனின் மொத்த தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. | மேற்கூறிய கடன்களை சம்பந்தப்பட்ட குற்றவாளிகளிடமிருந்து மீட்டெடுக்க வங்கி சிஐடி இல் வழக்கு பதிவு செய்துள்ளது. | மேற்கூறிய தொகையை மீட்டெடுக்க குற்றவாளிகளுக்கு எதிராக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான தலைமை அலுவலக கட்டிடத்தினுடைய வாடகையாக மொத்தம் ரூபா. 38,312,700 செலுத்தப்பட்டிருந்தது. இருந்தும், கட்டிடம் மிகப் பழமையாக காணப்படுவதனால் கட்டிடத்தினுடைய அலுவலகம், தரிப்பிடம், கழுவும் அறை, சாப்பாட்டு அறை, களஞ்சியம் மற்றும் வயரிங் முறைமை போன்ற பெரும்பாலான வசதிகள் திருப்திகரமான நிலையில் இருக்கவில்லை. மேலும், வங்கியானது வாடகை ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளின் படி, காப்பீட்டு பாதுகாப்பினை பெறுவதற்கு தவறிவிட்டது. எனவே, ஊழியர்கள், சொத்துக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடைய பாதுகாப்பு என்பன ஆபத்தில் உள்ளது. | வங்கியினுடைய வேண்டுகோளின் பேரில், புதிய கட்டிடத்தின் கொள்வனவிற்கு நிதி அமைச்சு நியமித்த அமைச்சரவை தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகை குழு ஆகியவற்றை நியமித்துள்ளது. இருந்தும், பெறுகை குழு ஒரு கட்டிடத்தினை தெரிவு செய்திருந்தது மற்றும் 2018 ஒக்டோபரில் அவர்களின் பரிந்துரைகளை அமைச்சுக்கு வழங்கியிருந்தார்கள். இருப்பினும், இதுவரை நாங்கள் புதிய கட்டிடத்திற்கான அமைச்சரவை தீர்மானத்தை பெறவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தை பெற்ற பின்னர் புதிய கட்டிடத்தின் கொள்வனவுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு மைய வங்கி தீர்வை கொள்வனவு செய்வதற்கான செயன்முறை 2016 ஜுன் இல் தொடங்கினாலும், கணக்காய்வு திகதி வரை புதிய மைய வங்கி தீர்வை வங்கியால் கொள்வனவு செய்ய முடியவில்லை. இன்னும் செயன்முறை ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றது. | புதிய முறைமையை கொள்வனவு செய்ய நிதி அமைச்சு 2019 மார்ச் 01 இல் தவறான தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவை (ரிஈசி) நியமித்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு, எவ்ஆர்எஸ் மற்றும் ஆர்எவ்பி மற்றும் பத்தரிகை விளம்பரங்களை 2019 செப்ரெம்பர் 23 அன்று அனுமதிக்காக அமைச்சுக்கு வழங்கியுள்ளது. | வங்கியின் ஒரு மைய வங்கி தீர்வை கொள்வனவு செய்வதற்கான அனுமதியை பெற்றதன் பின் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் 467 ஆக இருந்தது. மற்றும் 2018 இல் முடிவடைந்த ஆண்டில் வங்கி 389 ஊழியர்களை பணியில் அமர்த்தியது. அதன்படி, 2018 திசெம்பர் 31 இல் 78 வெற்றிடங்கள் இருந்தன. மேலும் வங்கியின் சுமூகமான செயற்பாட்டில் தாக்கம் செலுத்தக்கூடிய 09 முக்கிய முகாமைத்துவ பதவிகள் வெற்றிடமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெற்றிடமாக காணப்பட்ட பதவிகளில், டிஜிஎம் கிரெடிற், எஜிஎம் (எச்ஆர்&எல்) மற்றும் சிரேஸ்ட கணக்காளர் போன்ற பதவிகள் நிரப்பப்பட்டன. மற்றும் தலைமை உள்ளக கணக்காய்வாளர் பதவியின் வெற்றிடங்களை நிரப்ப விளம்பரப்படுத்தப் பட்டது. | வங்கியின் செயற்பாட்டுகள் சுமூகமாக நடைபெறுவதை உறுதிசெய்ய அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தலைமை உள்ளக கணக்காய்வாளர் பதவி ஐந்து வருடங்களுக்கும் அதிகமாக வெற்றிடமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | குறித்த ஆண்டு மற்றும் கடந்த ஆண்டு காலப்பகுதியில், வங்கியால் குறித்த வெற்றிடம் தொடர்பாக பல தடவைகள் தேசிய பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டது இருப்பினும், பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் இலங்கை மத்திய வங்கியால் நெறிப்படுத்தப்பட்டதன் படி, தேவைப்படும் தகவல் தொழில்நுட்ப தகமைகளுடன் திருப்திப்படவில்லை. வங்கி குறித்த பதவி பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்தது. மற்றும் வங்கியின் எஸ்ஓஆர் இன் படி, விண்ணப்பத்தை அழைக்க இலங்கை மத்திய வங்கியின் நிலைப்பாட்டினை பெற்றது. | இலங்கை மத்திய வங்கியின் நிலைப்பாட்டினை பெற்ற பின், வங்கியின் நல்லாட்சியை பேணுவதற்காக உள்ளக கணக்காய்வாளர் பதவியின் வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |